## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் கம்பனியின் ("கம்பனி") 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழ் எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பென்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கம்பனியின் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனி

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும்,

தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்தால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் கம்பனியின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு திட்டத்தினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க கம்பனியின் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் 03 மாதங்கள் அல்லது அதற்கு குறைவான காலத்திற்காக முதலீடு செய்யப்பட்ட தொகை, காசு மற்றும் காசுக்கு சமனானவை என இனங்காணப்பட வேண்டிய போதிலும், 03 மாத காலத்திற்காக முதலீடு செய்யப்பட்டிருந்த | முதலீடுகள் குறுகிய காலம் மற்றும் நீண்ட காலம் என வகைப்படுத்தப்பட்டு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்ட பின்னர் நிதிக் கூற்றுக்கள் சான்றுறுதிப்படுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 125.745 மில்லியன் தொகை நிதி நிலைமைக் கூற்றில் காசு மற்றும் காசு சமனானவையின் கீழ் காண்பிப்பதற்கு பதிலாக நிலையான வைப்புக்களாக காண்பிக்கப்பட்டிருந்தமையினால், காசு மற்றும் காசுக்கு சமனானவை மற்றும் நிலையான வைப்பு அப் பெறுமதியினால் முறையாக குறைவாக மற்றும் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் 18(ஆ) பந்தியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேசிய காசுப் பாய்ச்சலினுள் ரூபா 0.95 மில்லியன் அந்நிய செலாவணி இழப்பு நிதி அல்லா கொடுக்கல் வாங்கலாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் கீழ் சீராக்கப்பட்டிராமையின் காரணத்தினால் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் அப் பெறுமதியினால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சீர் செய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | -மேற்படி- |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 34 பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் நேரிய பெறுமதி அச் சொத்தின் முகப்பு பெறுமதியிலிருந்து பொருண்மையாக மாற்றமடையும் போது 03 ஆண்டுகள் அல்லது 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டின் பின்னர் ரூபா 74.37 மில்லியன் பெறுமதியான காணிகள் மற்றும் கட்டிடங்கள் மீள்மதிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டில் உரிய மீள்மதிப்பீ மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 பந்தியின் பிரகாரம் வருடாந்த பெறுமானத் தேய்வு கணிக்கும் போது, அச் சொத்து தொடர்பாக எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயட்காலம் மீளாய்வு செய்யப்படாததன் காரணத்தினால் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்த பெறுமதி ரூபா 16.64 மில்லியன் பெறுமதியான 5 வாகனங்களின் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணத்தினால் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதன் முகப்பு பெறுமதி பூஜ்ஜியமாக காணப்பட்டது. | மோட்டார் வாகனங்கள் ரூபா 16.64 மில்லியன் ஆக மீள்மதிப்பு செய்யப்பட்டுள்ளது.<br>நிறுவனத்தின் பெறுமானத் தேய்வு கொள்கையின் கீழ் மீள்மதிப்பு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் 2024 யூலை 20 ஆம் திகதி வரையிலும் பெறுமானத் தேய்வு கணிக்கப்பட வேண்டியதுடன் குறித்த நிறுவனத்திற்கு அலுவலக உபகரணங்கள் மற்றும் மர தளப்பாடங்கள் மட்டும் மீள்மதிப்பு செய்வதற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| (உ) | 2023 பெப்ரவரி கொள்வனவு செய்யப்பட்டிருந்த மின்னாக்கி இயந்திரம் | எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் சரியான பெறுமதி |

| | | | |
|---|---|---|---|
| | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீள்மதிப்பீடு செய்யும் போது மீள்மதிப்பு பெறுமதி ரூபா 2.5 மில்லியன் அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தமையினால் அலுவலக உபகரணங்களின் பெறுமதி மற்றும் மீள்மதிப்பு அதிகரிப்பு ரூபா 2.5 மில்லியனினால் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் மீள்மதிப்பு அதிகரிப்பு திரட்டப்பட்ட இலாபத்திற்கு சீராக்கப்பட்டிருந்தமையினால் திரட்டப்பட்ட அதிகரிப்பு ரூபா 2.5 மில்லியனால் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் இலஙகை கணக்கீட்டு நியமம் 16 இன் 77 ஆம் பந்தியின் உப பந்திகள் (அ) தொடக்கம் (ஊ) வரையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் அதிகரிப்பு தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டியதுடன் நியமங்களுக்கு அமைவான வெளிப்படுத்தப்பட்டுள் ளமை உறுதி செய்யப்பட்ட பின்னர் நிதிக் கூற்றுக்கள் சான்றுறுதிப்படுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட காசுப் பாய்ச்சல் தயாரிக்கும் போது முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட வட்டி வருமானம் ரூபா 40.09 மில்லியன் என, மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட காசுப் பாய்ச்சல் கணிக்கும் போது ஆண்டினுள் காசாக பெறப்பட்ட வட்டி வருமானம் ரூபா 51.20 மில்லியன் என சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும், காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது அப் பெறுமதி ரூபா 24.85 மில்லியன் என காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டிற்கு தொடர்புடைய எனினும் 2024 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூபா 26.35 மில்லியனான வட்டி வருமானம் பெற வேண்டிய கணக்கின் கீழ் வட்டி வருமானம் ஊடாக சீராக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்குரிய பெறப்பட்டுள்ள வட்டி அட்டுறு வட்டி வருமானத்திற்கு தற்போது சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. | காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட்டுள்ள மை நிதிக் கூற்றுக்கள் சான்றுறுதிப்படுத்த முன்னர் உறுதி செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பரீட்சை மீதியில் இடை கம்பனி (நடைமுறை) கணக்கு மீதியாக நிலவிய கூட்டுத்தொகை ரூபா 139.09 மில்லியனான வரவு மற்றும் செலவு மீதிகள் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் ஊடாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதிகள் வரவு மற்றும் செலவு மீதிகளாக ஒரு சமனான பெறுமதிகளில் இடை கம்பனி கணக்குகள் (related parties accounts) இடையே காணப்படுகின்றதுடன் ஒருங்கிணைந்த பரீட்சைமீதி (Agency. Medical/Insurance) தயாரிக்கும் போது இந்த மீதிகள் பூஜ்ஜிய மதிப்பை அடைந்தமையினால் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்கள் முழுமையாக மற்றும் சரியாக தயாரிக்கப்பட்டுள்ள மை உறுதி செய்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.5.3 அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கலின் விபரம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆகஸ்ட் 09 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரை கம்பனியின் தலைவர் மற்றும் முகாமையாளரினால் ரூபா 2.25 மில்லியன் செலவொன்று ஏற்கப்பட்டு போலந்திற்கு சென்றிருந்ததுடன் அதனூடாக பெற்றுக் கொள்ளப்பட்ட வேலைவாய்ப்புக்களுக்காக 10 விண்ணப்பதாரிகளுக்கு விசா பெற்றுக் கொள்வதற்கு ஒரு முகவர் கம்பனியினால் 2024 ஏப்ரல் 09 ஆம் திகதி தொடக்கம் 14 நாட்களும், இரண்டாம் முறையாக மே 14 ஆம் திகதி தொடக்கம் யூன் 15 ஆம் திகதி வரை சென்னை அழைத்துச் சென்றிருந்தனர். புதிய விசா பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளுக்காக திகதிகளை உறுதிப்படுத்துவதற்காக, கம்பனியின் அலுவலக உதவியாளரொருவர், இரண்டு ஓட்டுநர்கள் மற்றும் முகாமைத்துவ உதவியாளரொருவர் மீளாய்வாண்டில் இந்தியாவில் புது தில்லி மற்றும் சென்னைக்கு அதே பணிக்காக மூன்று சந்தர்ப்பங்களில் 2024 சனவரி 24 திகதிய 08/2024 ஆம் இலக்க பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் வெளிநாடு சென்றிருந்தனர். அதற்காக ரூபா 6.52 மில்லியன் மற்றும் தொழிலாளர்களால் சுமார் 8 மில்லியன் தொகை செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் குறித்த பணி நிலைவேற்றப்படவில்லை. மேலும், கம்பனியின் தலைவரும் இந்த காலப்பகுதியில் இந்தியாவிற்கு செல்வதற்காக கடமை விடுமுறை விண்ணப்பித்திருந்ததுடன், அவர் வெளிநாடு சென்றமைக்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் வேலைவாய்ப்பிற்கான வீசா பெற்றுக் கொள்வதற்கு இரு சந்தர்ப்பங்களின் போது கூட்டுத்தொகை ரூபா 8.77 மில்லியனும் தொழிலாளர்களினால் சுமார் 08 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் குறித்த பணி நிறைவேற்றப்படாமையினால் ஏற்கப்பட்ட செலவு விளைவற்றதாக காணப்பட்டது. இந்த மூன்று பயணங்களுக்காக தனித்தனியான கோவைகள் முறையான தயாரிக்கப்பட்டிராததுடன் போலந்திற்கு வீசா பெற்றுக் கொள்ளுதல் மிகவும் கடினமான பணி என்பதை தெரிந்திருந்தும் இதை ஒரு சோதனை முயற்சியாக மேற்கொண்டதும், இந்த பணிக்காக இவ்வாறான பதவியணியினரை அனுப்பியதும் தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியவில்லை. | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த 03 வெளிநாட்டுப் பயணங்கள் குறித்து முறையான விசாரணை நடத்தி போதுமான அறிவு மற்றும் திறமையுடைய உத்தியோகத்தர்களை அனுப்ப தவறியமை தொடர்பாக தாபன விதிக் கோவையின் ஏற்பாகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் கம்பனியின் நிதி நிலைமைக் கூற்றில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திலிருந்து பெற வேண்டியதாக ரூபா 7.29 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் பணியகத்தின் நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் அம் மீதி ரூபா 3.03 மில்லியன் ஆகியமையினால் ரூபா 4.55 மில்லியன் இணங்கவில்லை. | வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திலிருந்து தொடர்புடைய தகவல்கள் பரீட்சித்து மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்கு முன்னர் உள்ளக கணக்கு மீதிகளின் துல்லியம் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் கணக்குகள் மற்றும் மூல ஆவணங்கள் நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தென் கொரியாவிற்கு செல்வதற்காக மீண்டும் செலுத்தும் கட்டணமாக 2006 ஆம் ஆண்டு தொடக்கம் ஒரு நபரொருவரிடமிருந்து ரூபா 50,000 வீதம் அறவிடப்பட்டிருந்த தொகையில் தொடர்ந்தும் செலுத்தப்பட வேண்டிய மீதியாக கூட்டுத்தொகை ரூபா 15.27 மில்லியன் 15 வருடங்களாக நிலவி வந்தது. | 5 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையிலுள்ள பெற வேண்டிய மீதிக்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசனை கோரி பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு பெற்றுக் கொடுக்கும் ஆலோசனை அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | தொடர்புடைய தொழிலாளர்களுக்கு பணம் விரைவாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | தென் கொரியாவிற்கு சென்றிருந்த வெல்டிங் தொழினுட்ப வல்லுநர்களின் அனைத்து செலவுகளும் தீர்ப்பதற்காக 2023 பெப்ரவரி மாதத்தில் ஒரு புலம்பெயர் தொழிலாளரிடமிருந்து ரூபா 2.580 மில்லியன் வீதம் 175 நபர்களிடமிருந்து கூட்டுத்தாகை ரூபா 451.584 மில்லியன் தொகை அறவிடப்பட்டு இரு ஆண்டுகள் கடந்திருந்தது. இப்படியிருக்கையில் இந்த 77 வெல்டிங் தொழினுட்ப வல்லுனர்களுக்காக ரூபா 200,000 வீதம் ஒருங்கிணைப்பு கட்டணமாக ரூபா 15.4 மில்லியன் மற்றும் கொரிய கம்பனியொன்றிற்கு தரகுப் பணமாக ரூபா 18.83 மில்லியனும் ஆக மொத்தமாக | இந்த கொடுப்பனவுகளுக்கான விலைப்பட்டியல்கள் நிதி பிரிவிற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | ஒரு விசாரணையொன்று நடத்தி உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய தொகை மற்றும் தரப்பினர் இனங்காணப்பட்டு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 34.23 மில்லியன் தொடர்ந்தும் செலுத்த வேண்டிய தொகையாக இரண்டு ஆண்டுகளாக நிலவி வந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் செலுத்தப்பட வேண்டிய மீதியினுள் ரூபா 0.62 மில்லியன் தொகை 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும், ரூபா 4.09 மில்லியன் தொகை 5 தொடக்கம் 10 ஆண்டுகள் இடைப்பட்ட காலமாகவும் நிலவி வருகின்றதுடன் அம் மீதிகள் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 5 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையிலுள்ள பெற வேண்டிய மீதிக்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசனை கோரி பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு பெற்றுக் கொடுக்கும் ஆலோசனை அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | -மேற்படி- |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அதிகாரத்தின் 7.9.6 ஆம் பந்தி | கொள்வனவு செய்வதற்கு முன்னர் அவ் உத்தியோகத்தரின் வாழ்க்கைத் துணை அல்லது தாய் அல்லது தந்தை அல்லது சகோதரி அல்லது சகோதரருக்குச் சொந்தமான அல்லது கடன் விண்ணப்பிப்பதற்கு முந்தைய 06 ஆண்டு காலப்பகுதியில் உத்தியோகத்தருக்கு அல்லது வாழ்க்கைத்துணைக்கு சொந்தமாக இருந்த மோட்டார் வாகனமொன்றிற்கு கடன் பெற்றுக் கொடுத்தல் பரிந்துரைக்கப்படக்கூடாத போதிலும், 4 உத்தியோகத்தர்களுக்காக, உத்தியோகத்தருக்கு அல்லது வாழ்க்கைத் துணைக்கு சொந்தமாக இருந்த மோட்டார் வாகனம் கொள்வனவு செய்வதற்கு மீளாய்வாண்டினுள் கூட்டுத்தொகை ரூபா 3.4 மில்லியன் கடன்தொகை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | இந்த வாகனக் கடன் வசதி இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ளது. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 1996 ஒக்தோபர் 04 திகதிய சங்க உள்விதிமுறை | (i) அரசின் முழு உரிமையுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு | எங்கள் நிறுவனம் ஒரு அரசினால் நிதியளிக்கப்படும் | நோக்கம் வினைத்திறனாக மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | முகவர் கம்பனி ஊடாக அரசின் பாதுகாப்பின் கீழ் ஒப்பீட்டளவில் குறைந்த செலவில் மற்றும் வரம்புகள் இன்றி இலங்கை தொழிலாளர்களை வேலைவாய்ப்புகளுக்கு அனுப்பும் சாத்தியக்கூறு இருந்த போதிலும் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் வேலை வாய்ப்புகள் முறையே 2100 மற்றும் 2556 கிடைக்க பெற்றிருந்த போதிலும், முறையே 663 மற்றும் 560 வெளிநாட்டு வேலைகள் மட்டும் வழங்கப்பட்டிருந்தன. அதில் கம்பனிக்கு பெறப்பட்ட வேலைவாய்ப்பு கட்டளைகளில் முறையே 460 மற்றும் 419 வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் வெளி நபர்கள் நிகழ்நிலை ஊடாக பெறப்பட்ட வேலைகளுக்காக பணியகத்தில் பதிவு செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை முறையே 203 மற்றும் 141 ஆகும். அதன் பிரகாரம் நிறுவனம் நிறுவப்பட்ட பிரதான நோக்கங்களை நிறைவேற்ற கம்பனி தவறிவிட்டது. | நிறுவனம் என்பதனால் குறைந்த ஆட்சேர்ப்பு கட்டணத்தின் அடிப்படையில் மற்றும் நம்பிக்கையான வேலை பாதுகாப்புடன் தொழிலாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு முயற்சி செய்யும் நிறுவனமாகும். வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடாக வேலைவாய்ப்பிற்காக 02 ஆண்டுகளுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது. அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டளைகள் 2025 ஆம் ஆண்டில் இரத்து செய்யப்படுவதுடன் 2024 ஆம் ஆண்டில் பெற்றுக் கொடுக்கப்பட்ட முதல் அங்கீகாரங்கள் 2026 வரை செல்லுபடியாகும். அதன் பிரகாரம் எதிர்காலத்தில் விண்ணப்பதாரர்களை வெளிநாடு அனுப்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | விளைத்திறனாக நிறைவேற்றப்படுப பிரகாரம் வருடாந்த செயல நடவடிக்கைத் திட்டம் மற்றும் மூலோபாய திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஊடாக வெளிநாட்டு வேலைவாய்புகளை மேம்படுத்துவதற்காக ஜயகமு ஸ்ரீலங்கா என்ற பெயரில் நாடளாவிய நிகழ்சித்திட்டமொன்று 2024 சனவரி தொடக்கம் யூலை வரை 24 மாவட்டங்களை உள்ளடக்கி நடத்தப்பட்டிருந்ததுடன், பணியகத்தினால் ரூபா 12 மில்லியன் செலவு செய்து 24 நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்குச் சொந்தமான அரசாங்கத்தின் ஒரே நிறுவனமான வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனமாக, எங்கள் நிறுவனம் ஜயகமு ஸ்ரீ லங்கா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதுடன் அந் நிகழ்ச்சிகள் ஊடாக பதிவு செய்யப்பட்டு நேர்முகப் பரீட்சைகளுக்காக அனுப்பப்பட்டு வெளிநாடுகளுக்கு செல்ல | அதிகபட்ச செயன் முன்னேற்றம் கிடைக்கும் வகையில் செயற்திட்டங்கள் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பங்கேற்பதற்கு வெளிநாட்டு வேலைவாய்பு முகவர் கம்பனிக்கு சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக முகவர் கம்பனியினாலும் அதற்காக ரூபா 1.359 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 13.359 மில்லியன் செலவு செய்து 24 நடமாடும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பதிவு செய்யப்பட்ட போதிலும் 2025 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை கம்பனியி 13 நபர்களை மட்டுமே வெளிநாடுகளுக்கு அனுப்பியிருந்தது. | ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | |
| (iii) | 2018 ஆம் ஆண்டில் சைப்ரஸ் நாட்டிலிருந்து பெறப்பட்ட வேலைவாய்ப்பு கோரிக்கையின் செல்லுபடியாகும் காலம் 2020 நவம்பர் 08 ஆம் திகதி முடிவடைந்திருந்த போதிலும் தொழிலாளர்களினால் தனிப்பட்ட முறையில் கண்டறிந்த வேலைகளுக்காக பணியகத்தில் நேரடியாக பதிவு செய்வதற்கு பதிலாக தொடர்புடைய வீசா அனுமதிப்பத்திரத்தை முகவர் நிறுவனத்திற்கு வரவழைத்து தொழிலாளர்களிடமிருந்து ரூபா 35,000 நிர்வாகக் கட்டணமாக கம்பனி அறவிட்டு பணியகத்தில் பதிவு செய்திருந்தது. 2024 ஒக்தோபர் தொடக்கம் வேலைவாய்ப்பு கோரிக்கைகள் நீடிக்கப்பட்டிராத போதிலும், சைப்ரஸ் நாட்டிற்கு தொழிலாளர்களை அனுப்புவுவதற்கு ரூபா 35,000 நிர்வாகக் கட்டணமாக கம்பனி அறவிடப்பட்டு பணியகத்தில் சுயமாக பதிவு (Self-Registration) செய்வதற்கு நடவடிக்கை எடுத்து | சைப்ரஸிலிருந்து எங்களுக்கு கிடைத்துள்ள வேலைவாய்ப்புகளின் பிரகாரம் அந்த நாட்டில் முகவர் நிறுவனம் இன்றி வழங்கப்படுகின்ற வீசாக்களுக்கான விண்ணப்பதாரர்களின் காப்புறுதி நடவடிக்கைகளை எங்கள் நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்வதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் முகாமைத்துவ கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் எங்கள் நிறுவனத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த வேலைவாய்புகள் ஊடாக வெளிநாடுகளுக்கு செல்லும் தொழிலாளர்களுக்கு மிகவும் நியாயமான தொகையான ரூபா 35,000 நிர்வாகக் கட்டணத்திற்கு உட்பட்டு, பணியகத்தில் பதிவு செய்யப்படுகின்றதுடன் AL/1500/001/18 அங்கீகாரம் 2024 ஒக்தோபர் தொடக்கம் வெளிநாட்டு வேலைவாய்பு | வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனமாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் உடன்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வருவதும் அவதானிக்கப்பட்டது. | பணியகத்தின் ஊடாக நீட்டிக்கப்படாமையினால் சுய பதிவு ஊடாக இவ்வாறு எங்களுக்கு பெறப்படுகின்ற வீசா அனுமதிப்பத்திரங்களுக்கான அங்கீகாரம் பெறப்படுகின்றது. | |
| (இ) | 1996 சங்க உள்விதிமுறையின் 2017 செப்தெம்பர் 28 திகதிய சிறப்புத் தீர்மானம் | விசேட திருத்தங்கள் உள்விதிமுறைக்கு உட்சேர்க்கப்பட்டு 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 06 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் விமான போக்குவரத்து சேவைகள் அனுமதிப்பத்திரம் (IATA) பெற்றுக் கொள்வதற்கு மற்றும் பயணச்சீட்டுகள் வழங்கும் பிரிவொன்று ஆரம்பிப்பதற்கு தகைமையுள்ள பதவியணியொன்று நியமிக்கப்படுவதற்கு தேவையான அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கும் அப் பிரிவிற்கு தேவையான சட்ட ரீதியான பின்னணியை தயாரிப்பதற்கும் முகவர் கம்பனி 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருள் அதற்கு தொடர்புடைய பதவி காணப்படாமை அவதானிக்கப்பட்டது. | தற்போது விமான பயணச்சீட்டு பிரிவிற்காக எமது நிறுவனத்தில் வேலைவாய்ப்பு மேம்பாடு உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அவர் உரிய தகைமைகளை (IATA) பூர்த்தி செய்துள்ளார். பதவியணியில் அப் பதவியை நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றது. | சங்க உள்விதிமுறையின் நோக்கங்களின் பிரகாரம், விமான பயணச் சீட்டுகள் வழங்கும் பிரிவினை ஆரம்பிப்பதற்கு தேவையான சட்ட பின்னணியைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 145.304 மில்லியன் மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 152.085 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 6.781 மில்லியன் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்காக தொழிலாளர்கள் ஆட்சேர்ப்பு வருமானம் 69 சதவீதத்தினால் மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் 25 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

(அ) 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் வெளிநாடுகளுக்கு செல்லுதல் 69 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தமையின் காரணத்தினால் மீளாய்வாண்டில்

தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் ஊடாக ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 128.96 மில்லியனால் குறைவடைந்திருந்ததுடன் அது ஒட்டுமொத்த வருமானத்தில் 20 சதவீதமாக காணப்பட்டது.

(ஆ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் கம்பனி ஊடாக விமான பயணச் சீட்டுகள் வழங்கப்படுகின்றதுடன், 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதனூடாக ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 111.438 இனால் அதிகரித்து ரூபா 170 மில்லியனாக காணப்பட்டது. அது ஒட்டுமொத்த வருமானத்தில் 61 சதவீதமாகும்.

## 3. செய்றபாட்டு மீளாய்வு

### 3.1. முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியினால் தனியார் நிறுவனமொன்றுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் ஆரம்பிக்கப்பட்ட இன்சிலெப் நிறுவனத்தை நடத்திச் செல்வதற்கு வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டிடத்திற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 600,000 தொகையான முற்பணம் கட்டிடத்திலிருந்து வெளியேறி 8 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் மீண்டும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இன்சிலெப் வைத்தி மையத்திற்கு வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டிடம் தொடர்பான வழக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் 2024 ஒக்தோபர் 30 ஆம் திகதி முடிவடைந்ததுடன் மேல் மாகாண சிவில் மேன்முறையீட்டு உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கு 2024 நவம்பர் 20 ஆம் திகதி முடிவடைந்தது. அதன் பிரகாரம் தற்போது குறித்த முற்பணம் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | முற்பணம் பெற்றுக் கொள்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நீண்ட காலமாக பரிவர்த்தனைகள் எதுவும் நடைபெறாது கூட்டுத்தொகை ரூபா 465,650 தொகையான 06 சேமிப்பு கணக்குகள் செயலற்ற நிலையில் பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன் அதில் கூட்டுத்தொகை ரூபா 231,878 தொகையான 4 வங்கி கணக்குகள் மூடுவதற்கு 2024 ஒக்தோபர் 29 ஆம் திகதி பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பிரகாரம் செயலற்ற வங்கி கணக்குகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | விமான பயணச்சீட்டிற்காக ரூபா 295,000 வீதம் இஸ்ரவேல் நாட்டில் விவசாய துறைக்காக வெளிநாடு செல்வதற்கு எதிர்பார்த்திருந்த 191 தொழிலாளர்களினால் | விமான பயணச்சீட்டுகளுக்காக ரூபா 295,000 தொகை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் தொடர்புடைய புலம்பெயர் தொழிலாளர்களில் 48 நபர்கள் | பயணச்சீட்டுகள் கொள்வனவு செய்வதற்காக உரிய முறைமையொன்று தயாரிக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தொகை ரூபா 56.345 மில்லியன் முகவர் கம்பனிக்கு 2024 பெப்ரவரி மாதம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் அவர்களில் 79 நபர்கள் 2024 திசெம்பர் 29 ஆம் திகதி இஸ்ரவேலுக்கு சென்றிருந்ததுடன் பயணச்சீட்டுகளின் விலை ரூபா 178,200 ஆக மட்டும் இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 116,800 வீதம் 79 நபர்களுக்கு ரூபா 9.23 மில்லியன் 2024 திசெம்பர் 29 ஆம் திகதி மீண்டும் தொழலாளர்களுக்கு செலுத்த வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் பயணச்சீட்டின் விலை மிகவும் அதிக விலைக்கு தனியார் நிறுவனத்தின் ஊடாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | திசெம்பர் மாதத்திலேயே வெளிநாடு சென்றிருந்தனர். அதனால் அப்போது பயணச்சீட்டின் விலை ரூபா 178,200 ஆகியமையினால் மேலதிக தொகை அவர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | வேண்டும். இது தொடர்பாக தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(இ) பிரகாரம் மீளாய்வு செய்யப்பட்டு எழுத்ததுமூல ஆலோசனை வழங்குவதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | முகவர் கம்பனியின் கோரிக்கையின் பிரகாரம் பணியகத்தினால் 2024 சனவரி தொடக்கம் நவம்பர் 13 வரை இஸ்ரவேல் விவசாய மற்றும் கட்டுமானத் துறையில் வேலைக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட 6,959 புலம்பெயர் தொழிலாளர்களிடமிருந்து பயணச்சீட்டிற்காக ரூபா 295,000 வீதம் நிலையான விலை அறவிடப்பட்டிருந்தது. 2024 நவம்பர் 13 ஆம் திகதி தொடக்கம் திசெம்பர் 24 ஆம் திகதி வரை பயணச்சீட்டொன்றின் சராசரி விலை ரூபா 163,275 தொடக்கம் 156,000 வரையான வீச்சில் காணப்பட்டதுடன் ஒரு நபரிடமிருந்து ரூபா 115,000 வீதம் 6,959 நபர்களிடம் ரூபா 800.29 மில்லியன் அதிகமாக அறவிடப்பட்டிருந்தது. | அனைத்து கொள்வனவுகளும் பெறுகை வழிக்காட்டி கோவையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அங்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் Tender Box ஊடாக தொழிநுட்ப மீளாய்வு குழுவின் முன்னிலையில் திறக்கப்பட்டு பொருத்தமான வழங்குனர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். இங்கு விமான பயணச்சீட்டொன்றின் விலை பெறப்பட்ட முத்திரையிடப்பட்ட விலைமனுக்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. | இது தொடர்பாக விசாரணையொன்று நடத்தப்பட்டு அதிகமான விலைக்கு பயணச்சீட்டுகள் கொள்வனவு செய்யப்பட்டிருக்குமெனில் அத் தொகை பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டு, தொடர்புடைய ஊழியர்களுக்கு பெற்றுக் கொடுத்தல் மற்றும் அவ் உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். மேலும், சங்க உள்விதிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் விமான போக்குவரத்து சேவை உரிமபத்திரம் (IATA) மற்றும் பயணச்சீட்டு வழங்கும் பிரிவொன்று ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | 2023 திசெம்பர் 05 ஆம் திகதி ஈநெட் மற்றும் பீபா ஆகிய நிறுவனங்கள் ஊடாக இஸ்ரவேலில் கட்டுமான துறையில் தொழில் | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. | வெளிநாட்டு வேலைகளுக்கு ஆட்சேர்க்கப்படுதல் மற்றும் ஏனைய |

| | | |
|---|---|---|
| வாய்ப்பொன்று பெறப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 2023 திசெம்பர் 29 ஆம் திகதி ஒரு தொழிலாளரிடமிருந்து ரூபா 1.63 மில்லியன் அறவிடப்படுவதற்கு பணியகத்தின் அங்கீகாரம் பெறப்பட்டது. 2024 சனவரி மாதத்தில் 22 தொழிலாளர்களை வெளிநாடு அனுப்ப ஏற்பாடு செய்து நவலோக மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு கம்பனியினால் அறிவிக்கப்பட்ட பின்னர் தொழிலாளரொருவரிடமிருந்து ரூபா 36,500 வீதம் ரூபா 803,000 செலவு செய்யப்பட்டு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போதிலும் வெளிநாட்டிற்கு அனுப்புவது இரத்து செய்யப்பட்டது. இரத்து செய்யப்பட்டமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன் தொழிலாளர்களினால் செலவு செய்யப்பட்ட தொகை அவர்களின் கோரிக்கை பிரகாரம் 2024 யூலை 29 ஆம் திகதி கம்பனியின்நிதியிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையினால் அச்செலவு கம்பனிக்கு நேர்ந்த நட்டமென்று கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. | | அத்தியாவசிய சேவைகள் மேற்கொள்வதற்கு உரிய முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும். இது தொடர்பாக தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(இ) பிரகாரம் மீளாய்வு செய்யப்பட்டு எழுத்ததுமூல ஆலோசனை வழங்குவதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முகவர் கம்பனிக்கு ஸ்ரீ லங்கன் எயார்லயின்ஸ் கம்பனியின் விமான பயணச்சீட்டுகள் நேரடியாக கொள்வனவு செய்யும் வசதி காணப்படுகின்றதுடன் அதற்காக 2021 மார்ச் 08 ஆம் திகதி தொடக்கம் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையில் ரூபா 500,000 உம் ஸ்ரீ லங்கன் எயார்லயின்ஸ் கம்பனியில் ரூபா 5,000,000 ஆக கூட்டுத்தொகை ரூபா 5,500,000 தொகை வைப்புத் தொகையாக வைக்கப்பட்டிருந்தது. எனினும் தென் கொரியாவிற்கு பணியகத்தின் ஊடாக 2023 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஒக்தோபர் வரை வெளிநாடு அனுப்பப்பட்ட தொழிலாளர்களுக்கு தனியார் போக்குவரத்து முகவர் நிறுவனமொன்று ஊடாக விலைமனுக்கள் கோரப்பட்டு மிகவும் அதிக விலையின் கீழ் முகவர் கம்பனீனால் பயணச்சீட்டு | உயர் முகாமைத்துவத்தின் ஆலோசனை பிரகாரம் நிகழ்காலத்தில் கொள்வனவு செய்யப்படுகின்ற அனைத்து விமான பயணச்சீட்டுகளும் அரசாங்க முகவர் நிறுவனத்தின் ஊடாக மட்டும் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பயணச்சீட்டு கொள்வனவு செய்வதற்காக உரிய முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும். இது தொடர்பாக தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(இ) பிரகாரம் மீளாய்வு செய்யப்பட்டு எழுத்ததுமூல ஆலோசனை வழங்குவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக 2023 ஆம் ஆண்டில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை ஊடாக சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்படாது 2024 செப்தெம்பர் வரை அதே முறையில் பயணச்சீட்டுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மின்சார செலவுக்காக பணம் செலுத்தும் போது கம்பனியின் பெயரை தவிர்த்து வேறொரு தனியார் தரப்பினரின் பெயரிலுள்ள பட்டியல்களுக்காக மீளாய்வாண்டினுள் ரூபா 285,419 செலுத்தப்பட்டிருந்தது. | நீர் பட்டியல்கள் சீர் செய்யப்பட்டுள்ளதுடன், மின்சார கட்டணங்கள் சீர் செய்வதற்கு தெவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதி பிரமாணம் பிரகாரம் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | பற்றுச்சீட்டு சான்றளிக்கும் உத்தியோகத்தரினால் பற்றுச்சீட்டு சரியானதும் மற்றும் ஒவ்வொரு விடயமும் முழுமையானதும் எனத் திருப்தியடையாமல் மீளாய்வாண்டினுள் கூட்டுதொகை ரூா 30.46 மில்லியன் பெறுமதியான 02 பற்றுச் சீட்டுகள் சான்றளிக்கப்பட்டிருந்ததுடன் அப் பற்றுக் சீட்டுகளுக்கு தொடர்புடைய எந்தவொரு ஆவணமும் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் பற்றுச் சீட்டிலும் எந்த விபரமும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. | -மேற்படி- |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 (i) பிரிவின் பிரகாரம் கட்டுப்பாட்டு சபையினால் உரியவாறு நியமிக்கப்படும் அதன் சொந்த உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனி ஆரம்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டு தொடக்கம் அறிக்கை திகதி வரையிலும் உள்ளக கணக்காய்வு பிரிவொன்று நிறுவப்பட்டிராததுடன் உள்ளக கணக்காய்வாளரொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | வெளிநாட்டு வேலைவாய்பு முகவர் கம்பனியில் ஆரம்பத்திலிருந்து உள்ளக கணக்காளரொருவர் காணப்படாததுடன் தற்போது வெளிநாட்டு வேலைவாய்பு அமைச்சினால் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது. 19 உத்தியோகத்தர்கள் மட்டும் கடமையாற்றும் எங்கள் நிறுவனம் மிகவும் சிறிய பிரிவொன்றினால் உள்ளக கணக்காய்வு பிரிவொன்று நிறுவுவது கடினமாகும். | உள்ளக கணக்காய்வாளரொருவர் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4.2 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 41(2)(எ) பிரகாரம் கட்டுப்பாட்டு சபையினால் தமக்கு உதவுவதற்காக ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று நிறுவப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காயய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |